**ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2018**

---

## 1. அபிப்பிராயம்

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,404,477 மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,790,035 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,194,512 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஊனமுற்றோரிற்கான உதவி வழங்கல் குறைவடைந்தமையே இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) குறைந்த வருமானமுடைய ஊனமுற்றவர்களை அடிப்படையாகக் கொண்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடமாடும் சேவைகளின் போது 1,500 by-focal spectacles மற்றும் 60,000 சோடி வாசிப்பு கண்ணாடிகளை வழங்குவதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 331 by-focal spectacles மற்றும் 50,811 சோடி வாசிப்பு கண்ணாடிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,425,210 தொகை செலவிடப்பட்டிருந்தது. மருத்துவச் சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு by-focal மற்றும் வாசிப்பு கண்ணாடிகளை வழங்குவது தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய சோடிக் கண்ணாடிகளிற்கான கேள்வி குறைவடைந்திருந்தது. மேலும் 5.,811 வாசிப்புக் கண்ணாடிகள் குறைந்த வருமான நிலைமையை அடிப்படையாகக் கொள்ளாமல் நடமாடும் சேவை இடம்பெறற இடங்களில் வழங்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளின் நீண்ட தூர மற்றும் குறுகிய தூர மூக்குக்கண்ணாடிகளின் பிரச்சனையை கருத்தில் கொண்டு 1500 மூக்குக் கண்ணாடிகளின் தேவைப்பாடு 2018 ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அவ் ஆண்டில் பெறப்பட்ட வேண்டுதல்கள் 331 ஆக காணப்பட்டது. 60,000 குறுகிய தூர மூக்குக் கண்ணாடிகள் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் காலத்திற்கு காலம் முகாமைத்துவத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக அவ் ஆண்டின் போது திட்டமிடப்பட்டவாறு நடமாடும் சேவைகளை நடாத்த முடியாதிருந்தது. | ஊனமுற்றவர்களின் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆண்டின் போது ஊனமுற்றவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு நபரொருவரிற்கு ரூபா 25,000 ஆகக் கூடிய தொகைக்கு உட்பட்டு 400 நபர்களிற்கு ரூபா 9,000,000 மானியம் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 10,053,057 தொகை 412 நபர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. 3 மாதம் அல்லது ஆண்டிற்கு ஒரு தடவை பிரதேச செயலகத்தின் பரிந்துரையுடன் செயன்முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் அறிக்கையொன்று செயலகத்தால் பெறப்பட வேண்டுமென குறிப்பிட்டு மானியம் கோரப்பட்ட விண்ணப்பத்தில் நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் சுயதொழிலிற்காக வழங்கப்பட்ட மானியங்கள் தொடர்பாக அத்தகைய 142 அறிக்கைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்தொடர் செயன்முறை முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனினும் 270 பின்தொடர் அறிக்கைகள் தற்போது பெறப்பட்டுள்ளது. | மானியங்கள் வழங்கப்படுதல் மற்றும் மானியங்களை பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துதல் இரண்டிற்கும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 366 வீடுகள் காணப்பட்ட போதிலும் வேலைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றிற்காக ரூபா 25,112,006 கூட்டுமொத்தமான தவணைப்பணம் செலுத்தப்பட வேண்டும்.இச் செலுத்த வேண்டிய தவணைப் பணத்தில் ரூபா 14,260,000 மற்றும் ரூபா 3,400,000 தொகைகள் முறையே நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகள் தொடக்கம் 6 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலம் கடந்திருந்த 15 மாவட்டங்களிலுள்ள 169 வீடுகளிற்காகவும் நிர்மாணங்கள் ஒரு ஆண்டிற்கு மேலாக தாமதமாகியிருந்த 18 மாவட்டங்களிலுள்ள 169 வீடகளிற்காகவும் செலுத்தப்பட வேண்டியிருந்தன. அவ் வீடுகளின் நிர்மாண வேலை | புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது திருத்துவதற்காக குறைந்த வருமானமுடைய ஊனமுற்றவர்களிற்கான ஆகக்கூடிய மானியத் தொகை முறையே ரூபா 250,000 மற்றும் ரூபா 150,000 ஆகும். பிரதேச செயலாளரால் முன்னுரிமை அடிப்படையிலான அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற அத்தகைய குறைந்த வருமானமுடைய நபர்களின் விண்ணப்பங்களிற்காக அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வீடமைப்பு மானியம் விடுவிக்கப்படுகின்றது. இம் மானியத்தை வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபையுடன் கைச்சாத்திடப்பட்ட | வீடமைப்பு மானியங்களை வழங்கும் போது தவணைப்பணக் கொடுப்பனவு துரிதப்படுத்தப்பட வேண்டியதுடன் தாமதங்கள் கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான செயன்முன்னேற்ற விபரங்கள் மற்றும் மிகுதிப் பணத்தை செலுத்தாதமைக்கான காரணங்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் சுப்பிரி வாசனா சம்பத் லொத்தர் விற்பனை வருமானங்களிலிருந்து 5 சதவீத பங்கிலாபம் வழங்கப்படுகின்றது. அதற்கிணங்க வருடாந்தம் பெறப்படுகின்ற நிதிப் பெறுமதியை குறிப்பாக கூறமுடியாதிருந்ததுடன் தேசிய லொத்தர் சபை அத்தகைய பெறுமதியை ஒருபோதும் அறிவித்திருக்கவில்லை. அதேபோல் கூறப்பட்ட நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு தவணைப்பணம் மூலம் மேற்படி மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதனால் அத்தகைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொகையை விடுவிப்பதற்கு அத்தகைய காலப்பகுதியொன்று எடுத்திருந்தது. அதற்கிணங்க மேற்குறிப்பிட்ட நிபந்தனையை பூர்த்தி செய்த பின்னர் செலுத்த வேண்டிய மிகுதி தவணைப்பணம் செலுத்தப்படுகின்றது. | |
| (ஈ) | களுத்துறை, கேகாலை, முல்லைத்தீவு, அனுராதபுரம்மற்றும் கண்டி மாவட்டங்களில் 9 வீடுகளை நிர்மாணிப்பதற்காக முதலாவது தவணைப்பணமாக ரூபா 723,000 காசுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவ் வீடுகளின் நிர்மாணங்கள் முன்னைய ஆண்டுகளில் வீட்டு பயனாளிகளிற்கு நிதி உதவி வழங்கப்படுவதில் காணப்பட்ட தாமதம் காரணமாக பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்டிருந்தன. | பின்தொடர் செயன்முறை முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனினும் பயனாளி மரணமடைதல், இடத்தை விட்டு வெளியேறுதல், ஏனைய சில பொருத்தமான பாதுகாப்பு பெறப்படுதல், முதலாவது தவணைப்பணம் விடுவிக்கப்பட்ட பின்னர் அரசாங்க வேலையொன்றை பெறுதல் மற்றும் ரூபா 6,000 வருமான மட்டத்தை விஞ்சுதல் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. வீடு நிர்மாணம் தொடர்பாக சில பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தன. | பின்தொடர் செயன்முறை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஊனமுற்றவர்களிற்கு உதவிகளை வழங்கும் போது உரிய பிரதேச செயலகத்தின் ஊடாக 3 தவணைப்பணம் மூலம் குறித்த தொகை செலுத்தப்படுகின்ற போதிலும் பிரதேச செயலகங்கள் ஊடாக தவணைப்பணக் கொடுப்பனவு பூர்த்தியடைந்தமை மற்றும் வீடுகள் பூர்த்தியடைந்த அறிக்கை பெறப்பட்டிருக்காதமை தொடர்பான கோவைகளின் விபரங்களை பிரதேச செயலகங்கள் பேணியிருக்காததால் வேலை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் தொடர்பான குறித்த தகவல்கள் கணக்காய்வின் போது பெறப்பட முடியாதிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்தகைய அனைத்து கோவைகளும் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்ட பணம் உரிய நபர்களிற்கு வழங்கப்பட வேண்டியதுடன் வீடுகளை பூர்த்தி செய்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | ஊனமுற்ற நபர்களிற்கு பிரவேச வசதிகள் வழங்கப்படுவது தொடர்பாக 2016 இன் 1 ஆம் இலக்க ஊனமுற்றவர்களிற்கான பிரவேச கட்டளையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் பிரவேசிக்கும் வசதிகளை அடைதல் தொடர்பான கண்காணிப்பு, அதற்கான தற்செயலான மேற்பார்வை மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான பொறுப்பு இம் மன்றத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்குகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் இன்னமும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய தொழிற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் பிரவேச வசதிகளை நிர்மாணிப்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை தொழிற்பாடுகள் தற்போது வரை குறித்துரைக்கப்பட்டவாறு ஆகக்கூடிய மட்டத்தில் அடையப்பட்டிருக்கவில்லை. | ஊனமுற்றவர்களிற்காக பிரவேச வசதிகளுடன் கட்டிடங்களளை நிர்மாணித்தல் தொடர்பாக சட்ட நவடிக்கை எடுப்பதன் மூலம் செயலகத்தின் பிரதான தொழிற்பாடொன்றாக இது கருதப்பட்டு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்ட உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், Sign Language மொழிபெயர்ப்பாளர், கணக்காளர், Braillee Instructor பதவிகள் உள்ளடங்கிய 16 பதவிகளிற்காக 40 | ஊனமுற்றவர்களிற்காண தேசிய மன்றத்திற்கு உத்தியோகத்தர்களை இணைத்தல் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சால் மேற்கொள்ளப்படுகின்றதுடன் | ஊனமுற்றவர்களிற்கு நிவாரணங்களை வழங்கும் போது கடமைகளை ஆற்றுகின்ற தேசிய செயலகத்தின் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2018 மார்ச் 19 இல் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2019 யூன் 30 வரையிலும் அவ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்ட 26 உத்தியோகத்தர்கள் மன்றத்தின் தொழிற்பாடுகளை ஆற்றியிருந்தனர். | சில சந்தர்ப்பங்களில் அமைச்சிற்கு இவ் விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்வதற்கு உரிய நிறுவனங்களிற்கு அமைச்சு அறிவித்திருந்த போதிலும் இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |